FWC

# வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

# Field Work Centre

## தவணைப் பரீட்சை, நவம்பர் - 2017

## Term Examination, November - 2017

| தரம் :- 13 (2018) | இந்துசமயம் | புள்ளித்திட்டம் |
|---|---|---|

| | | | | |
|---|---|---|---|---|
| (1) 5 | (11) 3 | (21) 1 | (31) 3 | (41) 1 |
| (2) 5 | (12) 5 | (22) 4 | (32) 2 | (42) 5 |
| (3) 4 | (13) 4 | (23) 4 | (33) 1 | (43) 3 |
| (4) 2 | (14) 5 | (24) 2 | (34) 4 | (44) 5 |
| (5) 1 | (15) 4 | (25) 2 | (35) 5 | (45) 3 |
| (6) 5 | (16) 3 | (26) 2 | (36) 3 | (46) 1 |
| (7) 4 | (17) 1 | (27) 3 | (37) 4 | (47) 4 |
| (8) 5 | (18) 5 | (28) 3 | (38) 3 | (48) 2 |
| (9) 4 | (19) 2 | (29) 4 | (39) 1 | (49) 3 |
| (10) 5 | (20) 4 | (30) 2 | (40) 1 | (50) 4 |

(50 x 2 = 100 புள்ளிகள்)

*(1)* *1)* தொன்று தொட்டு வரும் அறிவு என்பது } பொருள் அல்லது ஆன்மா மல நாசம் பெற்று இறைவனை அடைய வழிகாட்டும் நூல்.

ஆ - பசு
க - பதி
ம - பாசம்

அதாவது பதி, பசு, பாசம் என்னும் முப்பொருள்களை உணர்த்தும் நூல்

ஆகமம் என்பதில் உள்ள ஆ. சிவஞானம், க - மோட்சம், ம- மலநாசம் அதாவது மலத்தை நாசம் பண்ணி, சிவஞானத்தை உதிப்பித்து மோட்டசத்தை நல்குவது எனவும் பொருள்படும்.

b) புராண இதிகாசத்திற்கு முற்பட்ட காலம் திருமந்திரத்திற்கு முற்பட்ட காலம்

*2)* ஆலய அமைப்பு:-

மக்களின் ஆன்மீக வாழ்வு ஆகமங்களை மையமாகக் கொண்டு கூறுகின்றன. வேதங்கள் கூறும் அக்கினி வழிபாடும் சாதாரண மக்களுக்கு ஏற்புடைய உருவ வழிபாடும் சிவாகமங்களில் இணைக்கின்றன.

சிவாகமங்கள் ஆலய அமைப்பு, இடம் தெரிவு. செய்வது தூய்மைப்படுத்தல் கர்ஷணம் எனக் கூறப்படுகிறது.

கட்டிட அமைப்புக்கள் அமைய வேண்டிய இடங்கள் அளவைப் பிரமாணங்கள் போன்றவற்றை விரிவாக விளக்குகின்றன.

பிரகார லட்சண விதிப்படலத்தில் பிரகாரம் அமைக்கும் முறைகள் கூறப்படுகின்றது. சிலாபரீட்சணம் என்ற தலைப்பில் சிவாகமங்கள் திருவுருவங்களை செதுக்குவதற்கு

கருங்கல்லை தெரிவு செய்யும் முறை பற்றிக் கூறுகின்றது. (ஆலய அமைப்பு திசைகள் பற்றி கூறுதல்) (8புள்ளிகள்)

3) தத்துவக் கோட்பாடு

சிவகாமங்கள், யோகாபாதம், ஞானபாதம் என்பவற்றில் சைவசித்தாந்த கருத்துக்கள் உண்டு.கிரணம், சௌரவம், பௌஷ்கரம் ஆகிய ஆகமங்களில் சித்தாந்த சிந்தனைகள் பதி, பசு,பாசம் முப்பொருளுண்மை அவற்றின் இயல்பு, மூவகைத்திருமேனிகள் அவற்றின் இயல்புகள், ஐந்தொழில்கள் ஆன்மா ஈடேற்றம், மும்மலம் என்பவற்றைக் கூறுகிறது கிரண, ஆகமம், பதி, படலம் போன்ற தலைப்புக்களில் சைவ சித்தாந்த உண்மைகள், நாற்பத நெறியினூடாக குருலிங்க சங்கமவழிபாடு சிவசின்னங்கள் பற்றிய விளக்கம் சத்தினிபாதக் கோட்பாடு. முத்திக் கோட்பாடு (8 புள்ளிகள்)

(2) 1) இயல்புகள் :-

- ✦ சித்தத்தை இறைஞானத்தில் வைத்து வழிபாடு செய்தவர்கள்
- ✦ இறை உணர்வோடு வாழ்பவர்கள்
- ✦ அட்டமா சித்திகள் கைவரம் பெற்றவர்கள்
- ✦ ஆன்மார்த்த வழிபாட்டை அறிமுகம் செய்தவர்கள்
- ✦ சமூதாயத்துடன் சேர்ந்தும் வாழ்பவர்கள்
- ✦ ஆசாரங்களுக்கு உட்படாதவர்கள்

2)
- ✦ புரட்சிகரமானது
- ✦ ஒன்றே குலம் ஒருவனே தேவன் உள்ளமே பெருங்கோயில்
- ✦ சாதி வேறுபாடுகளை கலைத்து சமய சமரச சன்மார்க்க நெறியைப் பரப்பியவர்கள்
- ✦ சடங்கு முறை உண்மைகள், சமயநெறி, கோயில் வழிபாடுகள் முதலான
- ✦ புற செயல்களை விட உண்மையான வழிபாட்டை இவர்கள் ஏற்றுக் கொண்டார்
- ✦ அறிவாராய்ச்சியால் அன்பு நெறியை உயர்த்தியவர் (8புள்ளிகள்)

3)
- ✦ யோக சாதன நூல் - மந்திர சாத்திரம் தந்திர சாத்திரம் எனப் போற்றப்படும்
- ✦ தர்மசாத்திரமாகவும் விளங்கும் சிறப்புடையது
- ✦ அண்டவியல், வானிலை, கணிதவியல் உள்ளிட்ட இந்துக்களின் பௌதீக அறிவியல் பற்றிய குறிப்புக்கள் செறிந்துள்ளன.
- ✦ சைவ தத்துவத்தின் முதன் நூல்களைத் தெளிவாக அடையாளங் காட்டிய சிறப்பு
- ✦ சமயம், தத்துவம், அறிவியல் ஆகியவற்றை ஒருங்கே தரும் கலைக்களஞ்சியம்
- ✦ 9 தந்திரங்களைக் கொண்டது (8புள்ளிகள்)

(3) 1) சைவத்தின் முடிந்த முடிவு - பிரமாணநூல் - வேதம் பொது ஆகம சிறப்பு, திருமுறைகள் மெய்கண்ட சாஸ்திரங்கள் - மெய்கண்ட சாஸ்திரங்கள் பற்றிய விளக்கம்

2) முப்பொருள் உண்மை - பதி, பசு, பாசம் ஆகியவற்றை உண்மைப்படுத்தும் பிரமாணங்களுடாகவும் சாஸ்திர நூல்கள் கூறும் எடுத்துக் காட்டுக்கள் மூலம் விளங்க வைக்க வேண்டும். (8புள்ளிகள்)

3) சைவ நாற்பாதங்கள், குரு, லிங்க, சங்கம வழிபாடு, விபூதி, உருத்திராக்கம், பஞ்சாட்சரம், என்பன பற்றி விளக்க வேண்டும். (4புள்ளிகள்)

The National e-Learning Portal for The General Education

(4) 1) பிரகிருதியிடமிருந்து பிரிதல், இறைவனிடம் இணைதல் (2புள்ளிகள்)

2) யோக சூத்திரம் பதஞ்சலி (2புள்ளிகள்)

3) இறைக் கோட்பாட்டை ஏற்றுக் கொள்ளல் பதஞ்சலி கூறும் நான்கு பிரதான விடயங்களைக் குறிப்பிட வேண்டும்

புருட பிரகிருதித் தத்துவத்தை விளக்க வேண்டும் - கைவல்ய நிலை பற்றிய விளக்கம் இடம் பெற வேண்டும்.

இயமம், நியமம், ஆசனம், பிரணாயாமம் 5 , பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி (8புள்ளிகள்)

4) பிரகிருதியிலிருந்து பிரிதல், இறைவனிடம் இணைதல் சாங்கியம் ஏற்றுக் கொண்ட புருடன் பிரகிருதி என்னும் அடிப்படைக் கோட்பாடுகளை யோக தத்துவமும் ஏற்றுக் கொள்கிறது. சாங்கியம் ஏற்காத அறைக் கோட்பாட்டை ஏற்றுக் கொள்கிறது. - புருடன் - பிரகிருதி கைவல்லிய நிலை பற்றி விளக்கம் படவேண்டும். (8புள்ளிகள்)

(5) 1) ஊடகம் என்பது மக்களுக்கு தகவல்கள், செய்திகள் போன்வற்றை வழங்குகின்ற தகவல் தொடர்புச் சாதனங்களை குறிக்கும்

உ + ம் :- நாளிதழ், வானொலி

தொலைக்காட்சி, இணையம் (4புள்ளிகள்)

2)
- ✦ இந்து சமய கருத்துக்கள், இந்து சமய நெறிமுறைகள் வழிபாட்டு மரபுகள், தத்துவ சிந்தனைகள் என்பவற்றை சமுதாயத்தில் செல்வாக்கு பெறவும் வாய்ப்பு உண்டாகும்.
- ✦ சமய அறிவுப் போட்டிகள், பேச்சுக்கள் சமயகல்வி தொடர்பான விடயங்கள் வளர்ச்சியடைய உதவுகின்றன.
- ✦ பிரசங்கம், புராண படலம், நாடகங்கள் என்பவற்றினூடாக பக்தி, சமயஉணர்வு, வளர்க்கப்படுகின்றது.
- ✦ ஆலயங்களில் நடைபெறும் திருவிழா, கும்பாபிஷேகம் என்பவற்றை பத்திரிகை, வானொலி, இறுவெட்டுக்களினூடாக அறியும் சந்தர்ப்பம் ஏற்படும். (8புள்ளிகள்)

3) ஆதார பூர்வம், நம்பகத் தன்மை, உண்மைத்தன்மை என்பவற்றுடன் தார்மீக பொறுப்புடன் இருத்தல் வேண்டும் மேலதிகமான விளக்கங்கள் உள்ளடக்கப்படல் வேண்டும். (8புள்ளிகள்)

(6) 1) கரகம் என்பதன் பொருள் விளக்கம்

அலங்கரிக்கப்பட்ட செம்மை பித்தளையிலான குடத்தை ஆட்டக்காரர் தலையில் வைத்துக் கொண்டு மேளப் பின்னனிக்கு ஏற்றவாறு குடம் கீழே விழாதவாறு ஆடும் ஆட்டம் கரகாட்டம் ஆகும்.

2) கரகம் என்பதன் வேறுபெயர்

புனித நீர்தாங்கும் குடம், கமண்டலம், குடம் கும்பம், செம்பாட்டம், பூங்குடம், பூம்பந்தல், கரககூத்து

3) கரகத்தின் தோற்றம் பற்றிய நூல்கள்

தொல்காப்பியம் - “கரகங்க வீழ்ந்த காவிரிப்பாவை”

நூலே கரகம்...”

4) கரகம் ஆடுவதன் நோக்கம்

நாட்டில் வரட்சி, நோய் ஏற்படும் போது அதில் நின்று மீளும் பொருட்டு அம்மன் மீதும், மாரி அம்மன் மீதும் கரகம் எடுப்பார். நேர்த்தியின் பொருட்டு கரகம் எடுப்பார்.

5) அரங்கு - ஆலயமுன்றல்

அறுவடை விழா

6) கரகம் அமைப்பதற்கு தேவையானவை

செம்பு, தண்ணீர், வேப்பிலை, நூல், அரளிப்பூ, தேம்பூ முதலானவையும் கிளி, அன்னம், புறா போன்ற தக்கைப் பறவை உருவங்களும் தேவையாகும்.

7) பயன்படுத்தப்படும் வாத்தியம்

தவில், நாதஸ்வரம், குழல், தாளம், பாறை, உடுக்கு

8) கரகத்தின் அமைப்பு, ஆடுபவரின் தோற்றம் பயன்படுத்தப்படும் வாத்தியங்கள் சமய, சமூக முக்கியத்துவம் என்பன பற்றி குறிப்பிடுகின்றது.

(7) 1) ஆ + துவைதம் - இரண்டல்ல, பிரம்ம மட்டும் உண்மை

அ - அல்ல - துவைதம் - இரண்டு

அல்ல இரண்டு எனவே பிரமம் மட்டும் உண்மை

பிராமணங்கள் - பிரத்தியட்சம்

அனுமானம்

ஆப்தவாக்கியம்

உவமானம்

அனுவாபக்தி

அருத்த பக்தி

2) பிரமம் மட்டும் உண்மை ஏனையவை யாவும் அதன் தோற்றம்

- ✦ அநாதியானது, அந்தமற்றது, அழிவில்லாதது
  எங்கும் செறிந்து நீக்கமற நிறைந்து இருப்பது
  பிரமத்தின் இருநிலைகள் - I நிற்குணநிலை
  II சகுணநிலை
- ✦ நிற்குணநிலை - மாயையோடு சேராதநிலை
  சகுணநிலை - மாயையோடு சேர்ந்த நிலை
- ✦ மகாவாக்கியங்கள் - தத்துவமஸி
  அகம் பிரமாஸ்மி
  சோகம், அஸ்மி
  என்னும் மகாவாக்கியங்கள் இதற்கு அடிப்படை
- ✦ பிரம்மமும் மாயையும் - பிரமம் ஒன்றே அஞ்ஞானத்தின் காரணமாக பலவகை பொருட்களாக காட்சியளிக்கின்றது.



The National e-learning Portal for The General Education

- ✦ அவித்தையாகிய அஞ்ஞானத்திலிருந்து விடுதலை பெறுமிடத்து பிரம்மமே எங்கும் பரந்தும் இருக்கும் பரிபூரண பொருள். (8புள்ளிகள்)

3) சங்கரர் ஆன்மாவுக்கு இருநிலை கூறுவர்

- ✦ பரமாத்மா - (என்றும் உள்ள பொருள்)
- ✦ ஜீவாத்மா - (அவித்தைக்கு உட்பட்டது)
- ✦ ஜீவாத்மாவும் பரமாத்மாவும் - ஒன்றென நிறுவும் வாதங்கள் (அவச்சேத வாதம் - பிரதிவிம்ப வாதம்)
- ✦ அவித்தை ஆகிய அஞ்ஞானத்தினாலே ஜீவன் தன்னை பிரமத்திலிருந்து வேறுபட்டதாக எண்ணுகிறது.

**ஆன்ம விடுதலை**

- ✦ சங்கரர் ஞானத்துக்கு முதன்மை அளிப்பவர்
- ✦ ஆன்மா அவித்தையில் இருந்து விடுபட்டு தன்மை பிரமம் என உணர்தல் விடுதலை
- ✦ சங்கரர் கூறும் முத்தி - அத்துவித முத்தி - தன்மை பிரமம் என்று உணரும் அத்வைத அனுபவம்
- ✦ ஜீவன் முத்தி விதேக முத்தி இரண்டும் குறிப்பிடுவார். (8புள்ளிகள்)

(8) சிறுகுறிப்பு

**1) <u>சக்தி வழிபாடு</u>**

சாக்த தந்திரங்களுள் மகா நிருவாண தந்திரம், சக்தி வழிபாடு பற்றியும் ஆசாரங்கள் பற்றியும் கூறுகிறது. சாக்த ஆகமங்கள் பொதுவாகத் தந்திரங்கள் என்றே கூறுவர். இவை தவிர தேவி பாகவதம், சௌந்தர்யலஹரி, துர்க்கா ஸ்தோத்திரம் என்பன தோத்திர நூல்களாகும். சரஸ்வதி அந்தாதி, சகலகலாவல்லி மாலை அபிராமி அந்தாதி என்பன. உபாசனையாக விளங்குகின்றன. சக்தியின் அடையாளங்களாக ஸ்ரீ சக்கர முக்கியஇடம் பெறுகின்றது. குங்கும பிரசாதம் முக்கிய இடம் பெறுகின்றது. யந்திர வடிவில் இறைவனை வழிபடும் முறை காணப்படுகின்றது. புராணக் கதைகளாக மகிடாசுரவதம், அம்பு நிசாம்பவதம் என்பன முக்கியம் பெறுகின்றது.

**2) <u>அறிமுகம்</u>**

சைவத்தையும் தமிழையும் போற்றிப் பாதுகாத்த நாவலரது வழியில் அவரது சிந்தனைகளையும் கொள்கைகளையும் சைவ மரபைப் பேணிப் பாது காப்பதற்காக உருவாகியதே சைவ பரிபாலன சபையாகும். இது 1888ம் ஆண்டு 10ம் மாதம் 29ம் திகதி ஆரம்பிக்கப்பட்ட சைவசமய பரிபாலன சபை 1892. 09.17 இல் சைவபரிபாலன சபை எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

**<u>சபை நிறுவப்பட்டதன் நோக்கம்</u>**

- ✦ சைவத்தின் வளர்ச்சிக்கும் பிரசாரத்திற்கும் ஊக்கமளிப்பது
- ✦ சைவக்கோவில்களைத் தாபித்தல், பழுது பார்த்தல், திருத்தி அமைத்தல் கோவில்களைப் பொறுப்பேற்று நடத்துதல்.
- ✦ சைவப் பிள்ளைகளுக்கான நூல்களைப் பிரசுரித்தல்

The National Learning Portal for The General Education

**பணிகள்**

- இந்து சாதனம் எனும் பத்திரிகை தமிழில் வெளியிடப்பட்டது
- ஆங்கிலத்தில் Hindu orga என்ற பெயரில் வெளியிடப்பட்டது
- வருடந்தோறும் தமிழக அறிஞர்களும் எமது நாட்டு அறிஞர்களும் பங்கு கொள்ளும் சைவமாநாட்டை நடாத்துதல்.
- இச் சபை நாவலரதும், அவரது பரம்பரையினதும் சமய நூல்களையும் மறு பிரசாரம் செய்தல்
- பாடசாலை மாணவர்களிடையே பரீட்சை நடாத்தி சைவமா நாட்டின் போது பரிசில்களை வழங்கி ஊக்கமளித்தல்

**நடராஜ மூர்த்தம்**

சிவனின் மூர்த்தங்களில் ஒன்று பஞ்ச கிருத்திய விளக்கம் தோற்றம் துடியதனில்.... உரை விளக்கம் தூல, சூக்கும பஞ்சாட்சரங்களுடன் தொடர்புபடுத்தப்பட்டு நோக்கப்படுகிறது. திரு வைந்தெழுத்தின் தொடர்பு ந -திருவடி ம - திருவயிறு சி - திருத்தோள் வா - திருமுகம், ய - திருமுடி சைவசித்தாந்தம் , திருமந்திரம், புராணம் முதலானவை நடராசரைப் போற்றும் பண்பு கொண்டவை குனித்த புருவம் - அப்பர் பாடல் ஏனைய விளக்கங்கள்

**திருக்கேதீஸ்வரம்**

- இலங்கையில் மன்னார் மாவட்டத்தில் மாந்தை எனும் ஊரில் சிவாலயம் (வரலாற்றுக் கதைகள்)
- பஞ்ச ஈஸ்வரங்களில் ஒன்று
- கேதுவால் வழிபடப்பட்டது
- பாடல் பெற்ற திருத்தலம் -சம்பந்தர், சுந்தரர்
- திருக்கேதீஸ்வரநாதர் - இறைவன்
- கௌரி அம்மாள் - இறைவி
- பாலாவி - தீர்த்தம்
- வன்னிமரம் - தலவிருட்சம்
- 40 ஏக்கர் பரப்பில் அமைந்துள்ளது
- பஞ்சலிங்கங்கள் 63 நாயன்மார் திருவுருவங்கள்
- சிவராத்திரி விழா சிறப்பானது
- மகோற்சவசாலம், தொடர்பான நூல்கள் ஏனையவிடயங்கள் எழுதப்பட வேண்டும்

The National e-Learning Portal for The General Education

**பெரியாழ்வார்**

பாண்டி நாட்டில் வில்லி புத்தூரில் தந்தை - முகுந்தர்

தாய் - பதுமை

ஆனிமாத சுவாதி நட்சத்திரம் அவதரித்தார்

மறுபெயர் - விஸ்ணு சித்தர், பட்டத்பிரான்

பிரபந்தங்கள் - திருப்பல்லாண்டு , பெரியாழ்வார் திருமொழி

**பணிகள்**

- நந்தவனம் அமைத்து மலர் கொய்து மாலையாக தொடுத்து திருமாலுக்கும் சாத்தும் திருப்பணி
- இறை அருளால் பொற்கிளி பெற்று ஸ்ரீ வில்லிபுத்தூரில் கோயில் கட்டி பூசைக்குரிய மலர் மாலை கொடுத்து வந்தார்